Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month
Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17
Licensed to Post without Prepayment
WPP No. TN/PMG(CCR)WPP-608/15-17

வேணு : 20 | பிப்ரவரி 2015 | கானம் : 7



10 - 18.1.2015 - சென்னை நாரத கான சபாவில் ஸ்ரீசைதன்யர் சரித்திர உபன்யாசம்

Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME · NO SELF INTEREST · ONLY GOD · NO NAME

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை




வேணு : 20 | பிப்ரவரி 2015 | கானம் : 7

Delivered by India Post www.indiapost.gov.in

Please subscribe to avoid delay



டிசம்பர் 25 மதுரகீதம் இறுதிசுற்று போட்டி
மற்றும் பரிசு வழங்குதல்
இடம் - மஹோதயா ஹால், அசோக்நகர், சென்னை
முதல் பரிசு பி.எஸ்.முத்தா பள்ளி, மாம்பலம்



ஜன 3 மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை
பாக்யாஜி மற்றும் ராமானுஜம்ஜி - காமராஜர் அரங்கம் சென்னை



மலேசிய நாமத்வார் சார்பாக வெள்ள நிவாரண பணி உதவி

Please subscribe to avoid delay



ஜனவரி 1 மதுரபுரி ஆஸ்ரமம் வைகுண்ட ஏகாதசி

ஜனவரி மாதம் மங்களூரில் மாணவர்களுக்கான கூட்டு ப்ரார்த்தனை முரளிஜி







ஜனவரி 24 - ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் பிரதிஷ்டா தின வைபவம்



Please subscribe to avoid delay







ஜனவரி 1 மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை
சென்னை அம்பத்தூர் விவேகானந்தா ஜூனியர் காலேஜ்







Please subscribe to avoid delay

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 20 பிப்ரவரி 2015 கானம்: 7

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**இந்த இதழில் ...**


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர்-227 | 03 | பாலகர்களுக்கு ஒரு கதை | 24 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 09 | மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை | 26 |
| பாகவத பழம்- ஸ்க 2/21 | 11 | ப்ருந்தாவன கண்ணன் | 29 |
| ரகசியம் ஒன்று .. | 13 | மாலே மணிவண்ணா | 32 |
| வீடு தேடி வருவான் விட்டலன் | 22 | ஸ்ரீமஹாபெரியவாள் கருணை | 34 |


ஒருவன் நல்லவனாகவும், கனவானாகவும், கீர்த்தியுள்ளவனாகவும், கொடையாளியாகவும், எல்லோரிடத்திலும் அன்புள்ளவனாகவும் இருந்தால், அவனுக்கு நல்லோரின் கூட்டுறவு கிடைத்திருக்கிறது என்று நினைத்து கொள்! - துளசிதாசர்

Please subscribe to avoid delay

## ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: யமுனாகல்யாணி

நாம ஜபத்தை அதிகரித்திடுவாய் - மனமே
நாம ஜபத்தை அதிகரித்திடுவாய்

வீணான வார்த்தைகளை தவிர்த்திடுவாய் (நாம)
அங்குமிங்கும் அலைவதை நிறுத்திடுவாய் (நாம)
தூங்கும் நேரத்தை குறைத்திடுவாய் (நாம)
வேண்டாத வேலைகளை தவிர்த்திடுவாய் (நாம)
பண்பற்ற செயல்களை பழகாதிருப்பாய் (நாம)
எண்ணங்களின் எண்ணிக்கையை குறைத்திடுவாய் (நாம)
கவலையென்னும் சுழலில் சிக்காதிருப்பாய் (நாம)
வேறு சாதனைகளில் மயங்காதிருப்பாய் (நாம)
காணாத காட்சியெல்லாம் கண்டிடுவாய் (நாம)
காலம் நழுவுவதை உணர்ந்திடுவாய் (நாம)
ஆனந்த சாகரத்தில் மூழ்கிடுவாய் (நாம)

முன் அட்டை: பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகளின் அருளிச் செயலான "ஸ்ரீகீர்த்தனாவளி மண்டபம்" திறப்பு விழா ஜனவரி 21, 2015
பின் அட்டை: சென்னை நாரத கான சபாவில் ஸ்ரீகிருஷ்ண சைதன்யர் சரித்திர உபன்யாசம் - ஜனவரி - 10 - 18, 2015






Please subscribe to avoid delay

# மதுரமான மஹனீயர் – 227

-டாக்டர். ஆ.பாக்யநாதன்

ஆந்திராவில் உள்ள ஓங்கோலை சேர்ந்த திரு.சிவராமன், அங்கு வேதாத்யயனம் செய்து கொண்டிருந்தார். 2000இல் நம் பாடசாலையில் வித்யார்த்தியாக இருந்த ஸ்ரீமனோகர் கனபாடிகளின் உறவினர் இவர். மனோகர் சொன்னதன் பேரில், அப்பொழுதைய அத்யாபகர் ஸ்ரீமல்லிகார்ஜுன ஸோமயாஜி அழைக்கவே, நம் பாடசாலைக்கு வந்து சேர்ந்தார். திரு.சிவராமன் கிரம பாடம் வரை, ஆலப்பாக்கம் மதுரமுரளி பவன ஸ்ரீஸ்வாமிஜியின் பாடசாலையிலேயே படித்து முடித்தார்.

பாடசாலையில், ஸ்ரீஸ்வாமிஜி ஒவ்வொரு வித்யார்த்தியிடமும், ப்ரத்யேக அன்பை பொழிவார்கள். ஒரு குறையில்லாமல், அன்னையை விடவும், அதிக கவனிப்பு செலுத்துவார்கள். அப்படித்தான், சிவராமனும் ஸ்ரீஸ்வாமிஜியின் அன்பினால் கட்டுண்டார். பாடசாலைக்கு வரும்பொழுது, சிறப்பான பெயர் பெற்ற நம் பாடசாலையில், நல்ல வேதாத்யயனம் செய்து சொந்த ஊருக்கே திரும்பி சென்று, நற்பணி ஒன்றில் இருக்க வேண்டும் என சிவராமனுக்கு ஆசை இருந்தது. ஸ்ரீஸ்வாமிஜியின் அன்பிற்கு ஆட்பட்ட பின்னரோ, எவ்விதத்திலாவது, ஸ்ரீஸ்வாமிஜியின் கைங்கரியத்திலேயே இருக்க வேண்டும் என்று ஆசை அவருக்கு வந்தது. அது வளர்ந்து, பின்னால் பலிதமும் ஆனது. ஆரம்பத்தில் சிவராமனுக்கு மனதில் நிறைய கேள்விகளும், அதை கேட்க தயக்கமும் இருக்கும். ஸ்ரீஸ்வாமிஜியோ, பிறரிடம் பேசுகையில் கேட்காமலேயே, அதற்கெல்லாம், பதில் கொடுத்து விடுவார். இது பலமுறை நடக்கும். காலஞ்செல்ல செல்ல, ஸ்ரீஸ்வாமிஜியின் அன்பினால் ஈர்க்கப்பட்ட சிவராமனால், ஸ்ரீஸ்வாமிஜியை விட்டு, பிரிந்து இருப்பதை யோசிக்கவே முடியாமல் போனது. அவசிய காரணமாக, அப்படி எங்காவது போனாலும், திரும்பி ஆஸ்ரமம் வரும்வரை சிவராமனுக்கு நிம்மதி இருக்காது! அதுவரை மனது பரபரப்பாக இருக்கும்.

ஸ்ரீகுருஜியை பற்றிய பழங்கால நினைவுகள், பேசப்பேச அவருக்கு வந்து கொண்டே இருக்கின்றன. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ஒருமுறை வாத்யார் வெங்கட்ராமனை, ஹைதராபாத்



Please subscribe to avoid delay

பாடசாலையில், கொண்டு விடச்சொல்லி சிவராமனை அனுப்பினார். அன்று பஸ்ஸ்டாண்ட் வரை கூட்டி செல்ல யாருமில்லை. தினமும் ஸ்ரீஸ்வாமிஜிக்கு பூஜை, தரிசனம், உபன்யாசம் என ஏதாவது பல அலுவல்கள், நெருக்கடியாக இருந்து கொண்டே இருக்கும். அன்றும் அப்படித்தான் இருந்தது. ஆனாலும், தானே வாடகைக்கு இரண்டு வண்டிகளை பிடித்து கோயம்பேடு வந்து, பஸ்ஸில் உட்கார வைத்து, கிளம்பும்போது பெற்றோர் எப்படி குழந்தைகளை வழியனுப்பி வைப்பரோ, அப்படி வழியனுப்பி வைத்தார் ஸ்ரீஸ்வாமிஜி. "இம்மாதிரி பல இனிய நினைவுகளை எல்லாம் தன்னால் மறக்கவே முடியாது; அவை அலை மோதுகின்றன" என்பார் சிவராமன்.

படிப்பு முடிந்த பின், சொந்த ஊருக்கு போக வேண்டும் என சிவராமன் நினைத்திருந்தார் அல்லவா! இப்பொழுதும் ஆந்திர அரசு வேதாத்யயனம் செய்தோருக்கு, அங்கு உள்ள நல்ல கோவில்களில் அரசாங்க உத்யோகம் வழங்கி, ஒரு நற்பணியை செய்து வருகிறது. படிப்பு முடிந்தவுடன், இந்த வேலைக்கான அப்ளிகேஷன் **Form**ஐ பூர்த்தி செய்து, அனுப்பி இருந்தனர் சிவராமனின் பெற்றோர். அரசிடமிருந்து, ஒரு நேர்முக தேர்விற்கு வருமாறு அழைப்பு வந்தது. சிவராமனின் தந்தை போனில் கூப்பிட்டு, இதை தெரிவித்தவுடனேயே, "எனக்கு குருஜியிடம் கைங்கரியம் செய்வதில்தான் விருப்பம். இந்த உத்யோகம் வேண்டாம்" என்று சொல்லி விட்டார் சிவராமன். அப்பொழுது ஸ்ரீஸ்வாமிஜி அருகிலில்லை. அவருக்கு தெரிவிக்கவும் இல்லை. மாலையில் பாடசாலைக்கு வந்த ஸ்ரீஸ்வாமிஜியிடம், சொல்லலாமா வேண்டாமா, சொல்வது தவறா, சொல்லாமலிருப்பது தவறா என யோசித்தவாறு இருக்கையிலேயே ஸ்ரீஸ்வாமிஜி, "என்ன போன் வந்ததா? ஊரில் கூப்பிடுகிறார்களா?" என்று கேட்க சிவராமனுக்கு படபடவென அடித்து கொண்டது. விஷயம் முழுவதையும் ஸ்ரீஸ்வாமிஜியிடம் சொன்னவுடன், அவர் சிரித்துக்கொண்டே போய் விட்டார். **2006**இல் படிப்பு முடித்தவுடனேயே ஸ்ரீஸ்வாமிஜி, சிவராமனை பாடசாலையில் அத்யாபகராக இருக்குமாறு ஆக்ஞாபித்தார்கள். அதை தம் பாக்யமாக கருதி, இன்று வரை அத்யாபகராக இருக்கிறார் ப்ரும்மஸ்ரீ சிவராமன்.

ஒருமுறை **2009**இல் ஆஸ்ரமத்திற்கு வந்த ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், சிவராமனை கூப்பிட்டனுப்பி, "திருமணம் செய்து



Please subscribe to avoid delay

கொள்" என்றார். சிவராமன் தனக்கு அதில் விருப்பமில்லை என்றும், ஸ்ரீஸ்வாமிஜியின் அருகில் இருந்து சேவை செய்யவே ஆசை என்றும் சொன்னார். ஸ்ரீஸ்வாமிஜியோ அதற்கு, "என் அருகில் எத்தனையோ கிருஹஸ்தர்களும் இருந்து கைங்கரியம் செய்கின்றனரே" என்றவாறே பல உதாரணங்களையும் சொன்னார். மேலும் சனாதன தர்மம் காட்டும் வேதாத்யயனம் செய்த ஒருவர், இல்லறத்தில் இருப்பது, அந்த தர்மத்தை வளர்க்கும் என்று சொல்லி, பாடசாலையில் படித்து வந்த ஸ்ரீவத்ஸனின் சகோதரி பார்கவியை திருமணம் செய்யலாமே என்றார். ஸ்ரீஸ்வாமிஜியின் ஆக்ஞைப்படி, சிவராமன் தம் பெற்றோரை ஆஸ்ரமத்திற்கு வர சொன்னார். அப்படியே ஸ்ரீவத்ஸனின் பெற்றோரும் வரவே இருவீட்டாரும் ஸ்ரீஸ்வாமிஜி முன்பாக பேசி திருமண தேதியும் நிச்சயித்தனர். அச்சமயம் சிவராமனின் தாத்தா, மிகவும் சீரியஸாக இருந்தார். எந்த தருணமும் அவர் உயிர் பிரியலாம் என்று டாக்டர்கள் சொல்லி இருந்தனர். அதனால் சிவராமனின் தாயார், ஸ்ரீஸ்வாமிஜியிடம், "இப்பொழுது திருமணம் வைப்பது சரியா. தாத்தாவுக்கு ஏதாவது ஆகிவிட்டால் என்ன செய்வது" என்று கேட்க, ஸ்ரீஸ்வாமிஜி, "திருமணத்திற்கு ஒரு தடங்கலுமிராது. 'ஜம்'மென்று நடக்கும்" என்றருளினார். மேலும் திருமண வேலைகள் நன்றாக நடக்கின்றனவா என, சொந்த குழந்தையின் திருமண வேலை போல, விசாரித்தவாறே இருந்தார்கள். அப்பொழுது ஜயஹனுமான் பிரதிஷ்டை சமயம்; ஸ்ரீஸ்வாமிஜிக்கு பல வேலைகள் இருந்தன. இருப்பினும், ஸ்ரீஸ்வாமிஜி சிவராமனின் திருமண ஏற்பாடு விவரம் பற்றி, கேட்டுக்கேட்டு அருளினார். கல்யாணம் நெருங்கியபொழுது, ஸ்ரீஸ்வாமிஜிக்கு கொஞ்சம் உடல்நல குறைவு; ஆனாலும் முதல்நாளே கல்யாணத்திற்கு வந்து விட்டார். 5நாள் கல்யாணம் அருமையாக நடந்தது. எல்லோரும் மகிழ்ச்சி உற்றனர்; சிவராமனின் பெற்றோர் மனமும் நிறைவானது. பின்னர்தான், சிவராமன் தாத்தாவும் இறைவனடி சேர்ந்தார்.

2003இல், சிவராமனின் தந்தைக்கு ஹார்ட் அட்டாக் வந்து, உடனடி ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று சொல்லி விட்டார்கள். சிவராமனுக்கு பயமாய் இருந்தது. ஸ்ரீஸ்வாமிஜி தைரியம் சொல்லி, "ஆபரேஷனுக்கு பின் அப்பா சௌக்கியமாக இருப்பார். பயம் வேண்டாம்" என்று தைரியம்


Please subscribe to avoid delay

கொடுத்தார். அது அப்படியே ஆனது. 2010இல், சிவராமனின் தாய்க்கு புற்று நோய் வந்தது. உடனே என்ன செய்வதென்று புரியாமல், பயமுடன் தவித்தவாறு ரிப்போர்ட்டுகளுடன் ஸ்ரீஸ்வாமிஜியை வந்து பார்த்தனர். ஸ்ரீஸ்வாமிஜி, "அடையார் மருத்துவமனையில் சேர்த்து, அறுவை சிகிச்சை செய்தால் குணமாகி விடும். பின் மிகுந்த நலமுடன் இருப்பார்" என்று சொல்லி பயத்தை விலக்கி அருளினார். மருத்துவமனையில் பல நோயாளிகளை பார்க்கையில், சிவராமனுக்கு கஷ்டமாக இருக்கும். மனதில், "அம்மாவிற்கு ஸ்ரீகுருஜியின் அருள் கிடைக்க வேண்டுமே; ஆனால் அம்மாவால் குருஜியை பார்க்க போக முடியாதே?" என்று கவலை இருந்தது. ஸ்ரீஸ்வாமிஜியோ ஒன்றும் சொல்லாமலேயே மருத்துவமனைக்கு வந்தார்கள். நான்காவது மாடியில் இருந்த தாயை பார்த்து, ஆறுதலும் தைரியமும் அருளி சென்றார். தினமும் விசாரிப்பார். ஆபரேஷனுக்கு பின் தாயும் குணமானார். இன்று சிவராமனின் தாயும் தந்தையும் நலமுடன் இருக்கின்றனர். இப்படி தம் வாழ்க்கையில், தாண்ட முடியாத பெரும் கவலைகளை எல்லாம், ஸ்ரீஸ்வாமிஜி அருளால்தான் தாண்ட முடிந்தது என்பார் சிவராமன்.

அத்யாபகரான சிவராமன், ஸ்ரீபெரும்புதூரிலேயே தங்க ஒரு ஜாகை அமைத்து தந்திருந்தார் ஸ்ரீஸ்வாமிஜி. அப்படி தங்கி, ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜிக்கு கைங்கரியம் செய்து வந்தாலும், ப்ரேமிகவரதனுக்கு ஒருமுறையாவது, துளசியால் அர்ச்சனை செய்து பூஜை செய்ய வேண்டும் என்று சிவராமனுக்கு வெகு நாளாய் ஆசை. ஒருசமயம் பூஜை செய்யும் யோகேஷும் வெங்கட்ராமனும் இல்லை. மதியம் ஆஸ்ரமம் வந்த ஸ்ரீஸ்வாமிஜி, திடீரென சிவராமனை பார்த்து, "நீ ஒரு வாரம் பூஜையை பார்த்துக்கொள்" என்று சொன்னார். சிவராமனின் சந்தோஷத்திற்கு அளவில்லாமல் போனது. ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு பூஜை செய்வது என்பது சாமான்ய விஷயமா? சிறிதளவில் உயர்ந்த ஆசை இருந்தாலும், ஸ்ரீஸ்வாமிஜி நிறைவேற்றி விடுகிறாரே! சிவராமனும் ஒருவாரம் பூஜை செய்து சந்தோஷப்பட்டார்.

2006இல் ஒருசமயம் ஆஸ்ரமத்தில் இருந்து, நவீன் மற்றும் ஹரியுடன் கிளம்பிய ஸ்ரீஸ்வாமிஜி, காரில் சிவராமனையும் ஏறிக்கொள்ள சொன்னார். எங்கு போக



Please subscribe to avoid delay

வேண்டுமென்று சொல்லவில்லை. மலைப்பட்டு பஸ்ஸ்டாண்ட் வந்தவுடன், ஸ்ரீஸ்வாமிஜியிடம் ஹரி, "எங்கே போக வேண்டும் குருஜி" என, அவர், "நேரே ஓங்கோலுக்கு போ" என்றார். ஓங்கோல் அருகே ஒரு ஊரில் சின்ன சத்சங்கம்; அது முடிந்து திரும்புகையில், ஸ்ரீஸ்வாமிஜி நவீனிடம், "இதோ பார். இவ்வூர் ஜனத்தொகையை பார்க்கையில், இன்று சத்சங்கத்திற்கு வந்தவர்கள் மிக குறைவாக இருக்கலாம். ஆனால் சில வருடங்களில், நாம் சொல்லும் இந்த மஹாமந்திர கீர்த்தனத்தை பல நாடுகளில் பல இடங்களில் சொல்வார்கள். இது எல்லோருக்கும் நன்மை தர போவதை நாமே பார்ப்போம்" என்றார்கள். அன்று ஒரு நாமத்வாரும் இல்லை. ஆனால், இன்று எவ்வளவு நாடுகளில் மஹாமந்திர கீர்த்தனம் பரவி நன்மை தந்திருக்கிறது; எத்தனை நாமத்வார்கள் அமைந்திருக்கின்றன என்பதை பார்த்தால், ஆச்சரியம் மேலிடுகிறது அல்லவா?

பல சமயங்களில், ஸ்ரீஸ்வாமிஜி ஏகாந்தமாகவோ அல்லது ஓரிருவருடனோ, ஆஸ்ரமத்தில் ஜயஹனுமான் அல்லது ப்ரேமிகவரதன் சன்னதியில், இரவில் ஜபம், கீர்த்தனம் என்று இருப்பது வழக்கம். அப்படி ஒருநாள், ஜயஹனுமான் சன்னதியில் பல மணிநேரம், ஸ்ரீஸ்வாமிஜி மஹாமந்திரம் ஆனந்தமாக சொல்லிக்கொண்டு இருந்தார். அப்பொழுது இரவு பத்து மணி இருக்கும். மேலும் அன்று விளக்குகளும் எரியவில்லை. கும்மிருட்டு. அங்கு சுற்றி ஒரே மரங்களும் பூச்செடிகளும்தான் இருக்கும். பத்தடி தள்ளி ஒருவர் இருந்தால் கூட, சரியாக தெரியாது. வெகுதூரத்தில் நின்று கொண்டிருந்த சிவராமனுக்கு ஸ்ரீஸ்வாமிஜி அருகில் போக ஆசை; ஆனால் ஏகாந்தமாய் சொல்லிக் கொண்டிருக்கும் அவருக்கு தொந்திரவு ஆகுமோ என சிந்தித்தவாறு நின்றிருந்தார். அப்பொழுது, அந்த இருட்டுக்குள் ஒரு குரல் ஒலித்தது; "வா சிவராமா வா! நாமம் சொல்லலாம்" என்று அது ஒலித்தது. பார்த்தால் ஸ்ரீஸ்வாமிஜியேதான்! அந்த கும்மிருட்டுக்குள், எங்கோ தூரத்தில் நின்றிருந்த சிவராமனை எப்படி தெரிந்தது? இப்படி ஸ்ரீஸ்வாமிஜி அருகில் இருக்கையில், சிவராமனுக்கு அதிசயமாக கேட்கவும் பார்க்கவும், பாக்யம் பல கிடைக்கும். ஒருமுறை, அதிகாலை எழுந்து வந்த ஸ்ரீஸ்வாமிஜி சிவராமனிடம், "சிவராமா, உலகங்கள் எல்லாம்


Please subscribe to avoid delay

பகவானிடமிருந்து வந்தன என்று படிக்கிறோம் அல்லவா! நான் இன்று உலகங்கள் எல்லாம் பகவானிடமிருந்து தோன்றுவதையும், மறுபடி அவரிடமே சென்று அடங்குவதையும், ஒரு காட்சியில் பார்த்தேன்" என்றார். ஆச்சரியமுடன் ஏதும் கேட்கும் முன்னர், சிரிப்புடன் வேறு விஷயம் பேச ஆரம்பித்து விட்டார் ஸ்ரீஸ்வாமிஜி.

இப்படி சிவராமனுக்கு அனுபவங்கள் அநேகம்.


கிருஷ்ணன் குசேலரிடம், "சுதாமா! நாம் பாடசாலையில் படிக்கையில் நம் குரு சாந்தீபனி நம்மை பார்த்து, குழந்தைகளே! சௌக்கியமாக இருங்கள்" என்று அருளினார். அதனால்தான், நாம் சௌக்கியமாக உள்ளோம் என சொல்கிறான் என்று, ஸ்ரீஸ்வாமிஜி சொல்வார்கள். அதுபோல் ஸ்ரீஸ்வாமிஜியின் அன்பும் அருளும், தமக்கு ரக்ஷையாக இருக்கிறது என்பார் சிவராமன்!

## சனாதனப்புதிர் பகுதி 70 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. தீயை உண்டாக்குவதற்கு அரணி கட்டைகளை வியாசர் ஒன்றுடன் ஒன்று உராயும்பொழுது யாரை பார்த்தார்?
2. அப்ஸரஸை பார்த்து கொண்டிருக்கும்பொழுது அப்ஸரஸ் எதுவாக மாறினாள்?
3. பெண் கிளியை பார்த்துக்கொண்டு, அரணிக்கட்டைகளை உராயும் சமயம் என்ன நடந்தது?
4. அந்த வீர்யத்தில் தோன்றியது யார்?
5. சுகர் தனது குருவாக யாரை தேடி கொண்டிருந்தார்?
6. வியாஸர் சுகரை யாரை பார்க்கும்படி சொன்னார்?
7. வியாசருடைய நான்கு சிஷ்யர்களின் பெயர் என்ன?
8. சாந்தி பர்வா - அத்யாயம் 342 - (மோடிதர்மபர்வா) எந்த நடையில் காணப்படுகிறது?
9. சரபர் (சரபேஸ்வரர்) இவரை பற்றிய குறிப்புகள் எங்கே காணப்படுகின்றன?
10. மஹா கைலாச மூர்த்தி - இவருக்கு எத்தனை முகங்கள்? எத்தனை கைகள்? எத்தனை ஆயுதங்களை வைத்து கொண்டு இருக்கிறார்? குறிப்புகள் எங்கே காணப்படுகின்றன?



Please subscribe to avoid delay



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: ஆலயங்களுக்கு செல்லும்பொழுது நிச்சயமாக நாமசங்கீர்த்தனமும் செய்ய வேண்டும் என்பதை தாங்கள் வலியுறுத்தி வருகிறீர்கள். இறைவனின் சான்னித்யம்தான் ஆலயத்தில் எப்பொழுதும் நிறைந்துள்ளதே! பிறகு கீர்த்தனமும் செய்ய வேண்டும் என்பதற்கு அவசியம் என்ன?

பதில்: இதை உதாரணம் மூலமாக பார்ப்போம். ஒரு அறையில் நீங்களும் மற்றொருவரும் இருப்பதாக, வைத்து கொள்வோம். மற்றொருவரின் கவனம் உங்கள் மீது திரும்ப வேண்டும் என்றால், என்ன செய்வீர்கள்? ஒன்று, அவரை தொடுவீர்கள் அல்லது அவரை பெயர் சொல்லி கூப்பிடுவீர்கள் அல்லவா? கூப்பிட்டால்தான், அவர் உங்கள் பக்கம் திரும்பி உங்களை பார்ப்பார். அப்படித்தான், ஆலயத்தில் இறைவனின் சான்னித்யம் முழுவதுமாக இருக்கிறது என்பது உண்மைதான். இருந்தாலும், அவருடைய கவனம் உங்கள் பக்கம் திரும்ப வேண்டுமே! அவரது கவனத்தை, நம் பக்கம் திருப்புவதற்குத்தான், கீர்த்தனம் செய்ய வேண்டும். அவர் கவனம், நம் மேல் திரும்புவதற்குத்தான் அருள் என்று பெயர்.

கேள்வி: விண்வெளியில் வெகு தொலைவில் உள்ள கோள்கள் நம்மை பாதிக்கும் என்கிறார்களே? அது உண்மையா?

பதில்: நம் வாழ்வில், நம் கர்மவினைப்படி நடக்கும் நிகழ்வுகளின் காலத்தை, கோள்களின் சஞ்சாரம் காட்டுவது உண்மைதான். ஆஸ்திகர்களில் பலர், இதைப்பற்றி கவலைப்பட்டு அதை கவனிப்பதும், தங்களுக்கு ஏற்படும் தோஷங்களை போக்குவதற்காக ஓடி அலைந்து, பல பிராயச்சித்தங்களை கஷ்டப்பட்டு செய்வதையும் பார்க்கிறோம். ஆனால் ஒன்றை மறந்து விடுகிறோம்! நாம் வாழும், இந்த பூமியும் ஒரு கோள்தானே. இதன் சுற்று சூழலும், இதன் சமூகமும் நன்றாக இருப்பதற்காக, எத்தனை பேர் பாடுபடுகிறார்கள்? மிக குறைந்தவர்களே என்பது



Please subscribe to avoid delay

ஆச்சரியம்தானே! பூமியில் நமது வாழ்வு சரியாக அமைந்து விட்டாலோ, எல்லாமே சரியாகத்தானே இருக்கும்!

**கேள்வி:** கடவுள் ஏராளமான நன்மைகளை எல்லோருக்கும் தந்திருக்கிறாரே! ஆனால் பெரும்பாலானவர்கள் அவரை மறந்து அல்லவா வாழ்கின்றனர்? ஏன் இப்படி இருக்கிறது?

**பதில்:** பெற்றோரில்லாமல் ஒருவர் இவ்வுலகத்தில் வர முடியுமா? மேலும், தாய், குழந்தையின் மல ஜலம் சுத்தம் செய்வதிலிருந்து, சிறு குழந்தையை எப்படி எல்லாம் காப்பாற்றுகிறாள்! அந்த குழந்தை வளருகையில் அதன் உடல் ஆரோக்கியம், மனமகிழ்ச்சி, புத்தி வளர்ச்சி ஆகியவற்றிற்காக பெற்றோர்கள் எவ்வளவு பிரயத்தனப்படுகின்றனர்! ஆனால், அந்த குழந்தை வளர்ந்து பெரிதானால், அக்குழந்தைக்காக தன்னையே தியாகம் செய்யும், தாயையும் தந்தையையும் மறந்து விடுகிறது. அவன் பள்ளிக்கு சென்றால், அவன் பொது அறிவும் பௌதிக அறிவும் வளர, ஒரு ஆசான் பல வருடங்கள் முயற்சி எடுக்கிறாரே! ஒரு வேலையில் அமர்ந்தவுடன், அவர்களையும் ஒருவன் மறந்து விடுகிறான். எத்தனை பேர் விஷயத்தில், எப்படி எல்லாம் நண்பர்களும் உறவினர்களும் உதவுகிறார்கள். யாராவது இவர்களை ஞாபகம் வைத்து கொள்கிறார்களா என்ன? உதவி செய்த நண்பர்களையும் உறவினர்களையும், குறுகிய காலத்தில் மறக்கிறார்கள். உலகமே பெரும்பாலும், இப்படித்தான் இருக்கிறது. தாய், தந்தையரும், ஆசானும், நண்பர்களும், உறவினர்களும் கண்ணுக்கு தெரிபவர்கள்.

கடவுளோ அண்டசராசரங்களையும் ரசனையுடன் படைத்து, அதில் நம்மையும், நமக்காக பலவற்றை விதம் விதமாக படைத்து, நம்மை அதை அனுபவிக்கவும் வைக்கிறார். இத்தனையும் செய்து விட்டு, தன்னை காட்டி கொள்ளாமல், மறைந்தும் இருக்கிறார். கண்ணுக்கு தெரியும் ஒருவரிடமே நன்றி உணர்வு இருப்பது இல்லை; அப்படி இருக்கையில், கண்ணுக்கும் புத்திக்கும் புலனறிவிற்கும் எட்டாமல், இந்த உலகிற்கே ஆதாரமாக இருக்கும் கடவுளை, ஒருவர் நன்றி உணர்வு இல்லாது, மறந்து விடுகிறார் என்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது!



Please subscribe to avoid delay



# பாகவத பழம்

### ஸ்கந்தம் 2, அத்யாயம் 7

–ஸ்ரீ ஸ்வாமிஜி    21



பிரம்மா நாரதரிடம் அவதாரங்களைப் பற்றி கூறுவது: வராஹ, யக்ஞ, கபில, தத்தாத்ரேய, சனகாதிகள், நர நாராயண, ப்ருது, ரிஷப, ஹயக்ரீவ, மத்ஸ்ய, கூர்மாவதாரங்களின் தோற்றம், கார்யம், குணம் இவைகளைச் சுருக்கமாகவும் அழகாகவும் எடுத்துரைத்தார். (சென்ற இதழ் தொடர்ச்சி... மேலும் ..)

12) ஸ்ரீ நரசிம்மாவதாரம் : தேவர்களின் பயத்தை போக்கடிக்கும் பகவான் சுழலுகின்ற புருவங்களையும், தெற்றி பற்களும் உடைய பயங்கரமான முகம் உடைய, ஸ்ரீநரசிம்ம ரூபத்தை எடுத்துக்கொண்டு, தன்னை எதிர்த்து வந்த ஹிரண்யகசிபுவை மடியில் வைத்து துடிக்கின்ற அவனை நகங்களால் பிளந்தார்.

13) ஹரி அவதாரம் : குளத்தினுள் அதி பலம் பொருந்திய முதலை காலைப் பிடிக்க, யானைத் தலைவன் மிகவும் துயருக்கு உள்ளாகி தாமரை புஷ்பத்தை துதிக்கையில் எடுத்து, "ஹே ஆதிபுருஷனே! உலகிற்கு எல்லாம் நாதனே! நிர்மலமான கீர்த்தியுடையவனே! கேட்பதினாலேயே மங்களங்களை அளிக்கும் நாமங்கள் உடையவனே!" என்று அழைத்தான். அந்த குரலை கேட்டு பகவான் ஸ்ரீஹரி, கருடன் மேல் ஏறி வந்து சக்ராயுதத்தால் முதலையின் வாயைப் பிளந்தார். சரணமடைய விரும்பிய அந்த யானையை துதிக்கையில் பிடித்துக் கருணையால் விடுவித்தார்.

15) வாமனாவதாரம் : தர்மமார்க்கத்திலேயே நிற்கும் பலியை யாசிப்பதைத் தவிர, வேறு வழியில் அசைக்கவே முடியாது என்று வாமன உருவத்துடன் மூன்றடி மண் என்ற வ்யாஜத்தில் பூமியை பெற்றுக்கொண்டார். பிரதிக்ஞை செய்த மாத்திரத்தில் மூவுலகங்களையும் அளந்தார். அதிதியின் கடைசி பிள்ளையாக இருந்தபோதிலும், இவர் குணங்களால் மூத்தவரேயாவார். நாரத! தனது குருவான சுக்ராச்சாரியரால் தடுக்கப்பட்ட போதிலும் தருவேன் என்ற வாக்குறுதியைக் காப்பாற்ற, மூன்றாவதடிக்கு



Please subscribe to avoid delay

இடம் இல்லாதபோது, தன்னையே அர்ப்பித்தான் பலி. திரிவிக்ரமனுடைய பாததீர்த்தத்தை சிகையில் தரித்தான். அந்த பலிதான் அடுத்த தேவாதிபதி. இது அவனுக்கு ஒரு புருஷார்த்தமேயல்ல!

16) ஹம்சாவதாரம் : நாரத! உனது மிகுந்த பக்தியினால் சந்தோஷமடைந்த பகவான், ஹம்ஸமாக வந்து உமக்கு பகவானை எளியதாக அடையக்கூடிய பக்தியோகத்தை உபதேசித்தார்.

17) அந்தந்த மன்வந்த்ரங்களில் தோன்றிய அவதாரங்கள் : அந்தந்த மன்வந்தரங்களில் மனுவம்சத்தை நிலைநிறுத்த சக்ராயுதத்துடன் பகவான் தோன்றுகிறார். ஸத்யலோகத்தில் தனது சரித்திரங்களால் கீர்த்தியை பரவச்செய்து கொண்டு, துஷ்ட அரசர்களுக்கு தண்டனையளித்தார்.

18)தன்வந்தரி அவதாரம் : பகவான் உலகத்தில் தன்வந்திரியாக அவதரித்து, பெரும் வியாதிகளுடைய மனிதர்களின் வியாதிகளை, நாமஸங்கீர்த்தனத்தாலேயே விரைவில் போக்கடிக்கிறார். ஆயுர்வேதத்தையும் உபதேசிக்கிறார்.

19) பரசுராமாவதாரம் : க்ஷத்திரியர்கள் பிராம்மணர்களைக் காப்பது போக அவர்களுக்கு ஹிம்ஸை செய்து, தாங்களே நரகத்திற்கு வழியை அடையும் காலத்தில், பகவான் பரசுராமனாக அவதரித்து இருபத்தியோரு தடவை தனது கூரான கோடாலியால் நாசம் செய்தார்.

20) ராமாவதாரம் : நமக்கு அனுக்ரஹம் செய்வதில் நாட்டமுடைய பகவான், தனது கலாவதாரங்களுடன் (பரதன், லக்ஷ்மணன், சத்ருக்னன்) இக்ஷ்வாகு குலத்தில் அவதரித்தார். பிதாவின் கட்டளையை ஏற்று பத்தினியான சீதை மற்றும் தம்பியான லக்ஷ்மணனுடன் காட்டிற்குச் சென்றார். அவரை விரோதித்த ராவணனும் நாசம் அடைந்தான். ப்ரிய சீதையை பிரிந்ததால் லங்கையை எரிக்க விரும்பிய ஶ்ரீராமனின் சிவந்த கண் பார்வையால், நடுக்கமுற்று சமுத்திரம் அவருக்கு வழி அளித்தது. மார்பில், ஐராவதத்தின் ஒடிந்த தந்தங்களைத் தரித்த, கம்பீரமாக யுத்தக் களத்தில் சுற்றுகின்ற, தனது பத்தினியை அபகரித்த ராவணனின் கர்வத்தை, தனது வில்லின் நாண் ஒலியினாலேயே அழித்தார்.

(கனியும்)



Please subscribe to avoid delay

# ரகசியம் ஒன்று ...

- பூர்ணிமாஜி

ஒரு சமயம் கங்கையின் கரையில் ஒரு மகாத்மா வாழ்ந்து வந்தார். அந்த காலத்தில் இவரை போன்ற ஒரு உயர்ந்த நிலையை அடைந்த சாதுக்கள் பலர் இல்லை. இப்பேர்ப்பட்ட மகானாக இருந்ததால், எப்படி தாமரை மலர்ந்தால் வண்டுகள் தானே வந்து மொய்க்குமோ, அப்படி தங்கள் ஆன்மீக சாதனைகளில் தங்களை முன்னேற்றி கொள்ள இவரை அண்டிய சிஷ்யர்கள் பலர். அன்பே உருவான இந்த குருநாதரும் தன்னை அண்டிய அனைவரையும், அவர் அவர்களுக்கு தகுந்த சாதனைகளில் பயிற்று வந்தார்.

இதே காலத்தில் தென் இந்தியாவில் ஒரு இளைஞன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஆன்மீகத்தில் மிகுந்த ஈடுபாடு. பல சொற்பொழிவுகளையும் கதைகளையும் அவன் கேட்டிருந்தான். பல ஆன்மீக புத்தகங்களையும் அவன் படித்திருந்தான். அவனுக்கு தான் ஒரு ஜீவன்முக்தரான குருவை அடைய வேண்டும் என்ற தாபம் இருந்தது. ஒவ்வொரு நாளும் அவன் இறைவனை பூஜை செய்யும் போது அவனது பிரார்த்தனை இதுவாகவே இருந்தது. "இறைவா! நான் எந்த வித தகுதியும் இல்லாதவனாக இருக்கலாம், நான் பல கோடி புண்யங்கள் செய்யாதவனாக இருக்கலாம்; எனக்கு இறைவனை அடைவதற்காக தேவையான வைராக்கியமோ, சிரத்தையோ இல்லாமல் இருக்கலாம்; என்னிடம் உள்ள இந்த அனைத்து குறைபாடுகளையும் நானே உணர்வேன்; இருந்தாலும் நான் உன்னை அடைய விரும்புகிறேன். கருணையே உருவான நீ ஒரு குரு ரூபம் தாங்கி என்னை வழிநடத்தி செல்ல வேண்டும்" என்று அவன் இரவும் பகலும், இறைவனிடம் பிரார்த்தித்தான்.

நம் அனைத்து பிரார்த்தனைகளையும் இறைவன் அறிவான் அல்லவா! இறைவனும் இந்த பக்தனின் பிரார்த்தனையை நிறைவேற்ற எண்ணினான். இந்த பக்தனின் ஒரு நண்பன் இவனுக்கு, கங்கை கரையில் வாழ்ந்து வந்த அந்த மகானை பற்றி கூறினான். அதை கேட்ட இந்த பக்தனின்



Please subscribe to avoid delay

ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை! தனது பூஜை அறைக்கு சென்று இறைவனுக்கு பல முறை நன்றியுடன் நமஸ்காரம் செய்தான். "இறைவா! எந்த தகுதியும் இல்லாத என்னிடத்திலும் எவ்வளவு கருணை புரிந்துள்ளாய்! இப்பொழுது இன்னும் ஒரு பிரார்த்தனை. அந்த குருநாதர் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும். என் மீது அவர் அருள் கடாக்ஷம் விழ வேண்டும். என்னை அவர் வழிநடத்தி செல்ல வேண்டும்" என்று மனதுருகி பிரார்த்தித்தான்.

மறுநாளே, அவன் தன் குருநாதரை தரிசிக்க புறப்பட்டான். போகும் வழியில் அவனுக்கு மனதில் குருநாதரை காணப் போகிறோம் என்ற ஆனந்தமும் அவர் தம்மை ஏற்றுகொள்வாரா என்ற அச்சமும் மாறி மாறி தோன்றிக் கொண்டே இருந்தது. இறைவனிடம் தன்னை அவர் ஏற்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டே சென்று அந்த மகானின் ஆஸ்ரமத்தை அடைந்தான்.

அந்த ஆஸ்ரமத்தில் தனது குருநாதரை தரிசித்தான். உணர்ச்சி பொங்க, கண்களில் நீர் மல்க குருநாதரின் திருவடிகளில் விழுந்தான். இவன் ஒரு வார்த்தை கூட பேசாத போதும் குருநாதரே அவனை எழுப்பி, கருணையுடன் பார்த்து புன்னகைத்தார். அந்த ஒரு பார்வையிலும் புன்னகையிலும் அவர் அனைத்தையுமே அவனுக்கு உணர்த்தினார். குருநாதர், "மகனே! நான் அனைத்தையும் அறிவேன். நீ ஒன்றும் கூற வேண்டாம். எனக்கு நீ எங்கிருந்து வந்துள்ளாய், இறைவன் உன்னை என்னிடம் எதற்கு அனுப்பியுள்ளார்; நீ அடைய வேண்டியது என்ன என்று அனைத்தும் தெரியும். இனி கவலை வேண்டாம். நீ சரியான இடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டாய்" என்று கூறினார். அந்த சிஷ்யனுக்கு கண்களில் நன்றியுடன் கலந்த ஆனந்த கண்ணீர் பெருகிற்று. இப்பொழுதுதான் அவனுக்கு, கருணை, தயை, அன்பு என்ற வார்த்தைகளுக்கெல்லாம் அர்த்தம் புரிந்தது.

அவன் காண்போரிடமெல்லாம், "நமது குருநாதர் கருணை உருவானவர். இல்லை என்றால் என்னை போன்ற ஒரு அதமனுக்கும் அடைக்கலம் தர வேறு யாரால் முடியும்?"



Please subscribe to avoid delay

என்று கூறி வந்தான். இப்படி பல வருடங்கள் ஓடி விட்டன. எப்படி சூரியனை கண்டவுடன் தாமரை மலருமோ, அப்படியே, இந்த குருநாதரின் சந்நிதியில் இந்த சிஷ்யனின் ஆன்மீக முன்னேற்றம் மிக விரைவாக நடந்தது. அவன் தன் சாதனைகளில் முன்னேறி வந்தான்.

ஒருசமயம், குருநாதர் இவனை உலகம் எங்கும் சென்று இறைவனின் புகழை பரப்பும்படி உத்தரவிட்டார். இந்த சீடனோ மிகவும் தயங்கினான். அவன் குருநாதரிடம், "நானே இன்னும் ஞானம் அடையாத நிலையில் பிறருக்கு என்ன போதிப்பேன்? ஒரு குருவாக இருக்கும் தகுதி எனக்கு இல்லை. தாங்கள்தான் அனைவருக்கும் குருவாக இருந்து, வழி காட்ட வேண்டும்" என வேண்டினான். அதற்கு குருநாதரோ, நீ செய்கிறாய் என்ற எண்ணத்தைத் தவிர். உன் குருவின் ஆக்ஞை என்று எண்ணி செய். இறைவன் உனக்குத் துணையிருப்பான் என்று கூறினார்.

இப்படியாக இந்த சிஷ்யனின் பயணம் துவங்கியது. அவன் மிக விரைவில், புகழ் பெற்ற ஆன்மீக சொற்பொழிவாளர் ஆனான். அவன் சொற்பொழிவுகளை கேட்க கூட்டம் திரளாக வந்தது. மக்கள் அவனை வெறும் ஒரு சொற்பொழிவாளர் என்று மட்டும் பார்க்காமல், தங்களது ஆன்மீக குருவாகவும் பார்த்தார்கள். அவன் புகழ் எட்டு திக்குகளிலும் பரவியது. பல கோடி மக்கள் இவனை குருவாக அண்டி தரிசனம் செய்ய விழைந்தார்கள். எல்லோரிடமும் இவன், "ஆன்மீகத்தில் முன்னேற அஹங்காரம் அழிய வேண்டும். அதற்கு ஒரு ஞானியான குருவின் சரணத்தை ஆஸ்ரயிப்பதே வழி" என்று கூறி வந்தான்.

இப்படி பல வருடங்கள் உருண்டோடின. ஒரு நாள் இந்த சிஷ்யன், தனது சிஷ்யர்களுடனும், பக்தர்களுடனும் காசி வந்து சேர்ந்தான். தன் சிஷ்யர்களுடன், இவன் உரையாடி கொண்டிருக்கும்பொழுது, எங்கிருந்தோ கூட்டத்திலிருந்து ஒரு மெல்லிய குரலில், யாரோ இவனை பேர் சொல்லி அழைப்பது காதில் விழுந்தது. இப்படி தன்னை, சற்றும் மரியாதை



Please subscribe to avoid delay

இல்லாமல், பேர் சொல்லி அழைக்கும் இவன் யார் என்று, கோபமாக அவனும் அவன் சிஷ்யர்களும், குரல் வந்த திக்கை நோக்கி பார்த்தனர். அவனுக்கு, எதிர்பாராத அதிர்ச்சி காத்து கொண்டிருந்தது! அவனுடைய குருதான், அப்படி அவனை அழைத்தது! அதே உரிமையுடனும், அன்புடனும் தன்னை பேர் சொல்லி அழைத்த, அந்த குருநாதரை மீண்டும் பல வருடங்கள் கழித்து கண்டான். ஒரு கணம், மனது ஆனந்தத்தில் துள்ளியது. மறுகணமே, அவனுள் ஒரு எண்ணம் தோன்றியது. என்ன இருந்தாலும் நானே இப்பொழுது ஒரு குரு. என் சிஷ்யர்கள் முன்பு, இப்படி என்னை மரியாதை இல்லாமல், பேர் சொல்லி இவர் அழைத்திருக்க வேண்டாம். இடம் ஏவல் பார்த்து, நடக்க தெரியவில்லையே இவருக்கு! இப்பொழுது எல்லோர் முன்பும் நான் இவரை ஆமோதித்தால் எனக்குதான் அவமானம், என்று எண்ணினான்!

இந்த எண்ணங்கள் அவனுள் அலைமோதி கொண்டிருக்க, இவருக்கு நமஸ்காரம் செய்யலாமா வேண்டாமா என்று தயங்கிக்கொண்டு நின்றான். இவன் தன் குருநாதரை முதன்முதலில் தரிசனம் செய்தபோது, அவர் எப்படி இவனை பார்த்து புன்னகைத்தாரோ, அப்படியே இப்பொழுதும் புன்னகைத்தார். அது, நான் அனைத்தையும் அறிவேன் என்று மீண்டும் கூறிற்று! இவனிடம் எதையும் எதிர்பார்க்காமல் அவர் அங்கிருந்து நகர்ந்தார்.

ஆஹா! அஹங்காரம் என்பது எத்தகையதானது! அதை வென்று விட்டோம் என்று நினைக்கும்பொழுதே, எதிர்பாராத விதத்தில் அது தலை தூக்குகிறது. உண்மையில் ரகசியம் என்னவென்றால், குரு கிருபையால் மட்டுமே இந்த அஹங்காரத்தை ஜெயிக்க முடியும்!

**அக்டோபர் 4 முதல் (4.10.2014) - காலை 7.20 - 7.30AM ஒவ்வொரு சனிக்கிழமையும்** ***பொதிகை*** **தொலைக்காட்சியில் "*மதுரகீதம்*" - ஸ்ரீஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களை ஸ்ரீஅஸ்வின்குமார் பாடும் நிகழ்ச்சி ஒளிபரப்பாகிறது.**



Please subscribe to avoid delay

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**



Please subscribe to avoid delay

# வீடு தேடி வருவான் விட்டலன் – 12

தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

## ஸ்ரீஞானேஸ்வரர்

120கோடி ஜனங்கள் இருக்கும் இத்தேசத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் பக்தர்களும் ஞானிகளும் இருக்கலாம். ஒரு குடும்பத்தில் அல்லது ஒரு ஊரில் ஒரு மஹாத்மா இருப்பதே அபூர்வம். இது சாத்தியம்தான். ஒரு பிரதேசத்தில் ஒரு அவதார புருஷர் இருந்தால் ஆச்சரியம். ஒரே காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட அவதார புருஷர்கள் இருப்பது மிகவும் ஆச்சரியம். இது வெகு அபூர்வமாய் அமையலாம். ஆனால் ஒரு குடும்பத்தில் பிறந்த சகோதரர்களும், சகோதரியும் அவதாரங்களாக இருந்திருக்கிறார்கள். இது வேறு எங்கேயும் நிகழ்ந்ததில்லை. பாண்டுரங்கனிடம் சம்பந்தம் உடைய அவர்கள் அவதார புருஷர்கள். சொந்த சகோதரர்களுடன் ஒரு சகோதரி. அதில் ஒருவர்தான் ஞானேஸ்வரர்.

மஹான்களுக்கும் அவதார புருஷர்களுக்கும் வித்யாசம் உண்டு. ஒருவர் ஜபம், தியானம், கீர்த்தனம், யோகம் செய்து ஆத்ம சாக்ஷாத்காரம் பெற்று, ஜனன மரண பிரவாஹத்திலிருந்து விடுதலை பெற்றால், அவர் ஒரு மஹாத்மா. ஆனால், அவர்கள் அவதார புருஷர்கள் இல்லை. பகவானின் பூரண அருளுடன் பிறரை கரையேற்றுவதற்காக பிறப்பு எடுப்பவர்களே அவதார புருஷர்கள். அவர்கள் பூமியில் பிறந்த பின் எந்த ஒரு ஆத்ம சாதனையும் செய்வதில்லை. எது எல்லாம் தேவையோ, அது எல்லாம், பகவத் அனுபவங்கள் எல்லாம், அந்த அவதார புருஷர்களை தேடி வந்தடையும்.

ஞானேஸ்வரரின் தந்தையின் பெயர் விட்டோபந்த். விட்டோபந்தின் தந்தை பெயர் கோவிந்த பந்த். தாய் நீராபாய். கோவிந்தபந்தும் நீராபாயும், ஆபே என்கிற இடத்தில் வாழ்ந்து வந்தனர். அந்த ஊருக்கு கைனிநாதர் எனும் யோகீஸ்வரர் வந்தார். அந்த மஹானை பார்த்து இந்த தம்பதிகளிருவரும் வணங்கி, உபசரித்தனர். கைனிநாதர் கொஞ்சம் விபூதியை



Please subscribe to avoid delay

எடுத்து, இந்த தம்பதிகளிடம் கொடுத்து உங்களுக்கு ஒரு ஸத்புத்திரன் பிறப்பான் என்று ஆசீர்வதித்து விட்டு சென்றார். மஹான்களின் ஆசீர்வாதமும் பிரசாதமும் வீணாகாது அல்லவா? மஹானின் சொல் சத்தியமாயிற்று. அந்த பிரசாதமான விபூதியை உட்கொண்டதினால், பிறந்தவர்தான் விட்டல்நாத் என்கிற விட்டல்பந்த்.

சிறிய மாமரத்திலுள்ள இலையோ அல்லது புளிய மரத்தின் இலையோ மணக்காது. ஆனால் சிறிய துளசியின் இலையை முகர்ந்து பார்த்தால் அதில் கூட வாசனை இருக்கும். அதுபோல், சாதாரண மக்களை பார்த்தால் அவர்கள், ராமக்ருஷ்ணர், ரமணர் போன்ற ஒரு மஹானின் உபதேசத்தையோ, சரித்திரத்தையோ படித்தபின், கேள்விப்பட்ட பின், திருந்தி, நல்ல சுத்தமான வாழ்க்கை வாழ்வார்கள். அவர்கள் மா இலையோ அல்லது புளிய இலையோ போன்றவர்கள். அவை முளைக்கையில் மணம் இருக்காது. வாழ்க்கை மாறிய பின் அவர்கள் ஞான, வைராக்கியங்களை சம்பாதிக்க வேண்டும். மஹான்களின் விஷயமோ அப்படியில்லை. அவர்கள் துளசி போன்றவர்கள். துளசி அன்றுதான் முளைத்திருந்தாலும் சிறு இலையிலிருந்து கூட முளைக்கும்பொழுதே அதில் சுகந்த வாசனை வீசும். மனிதர்களிடம் கை, கால் என்பது பிறக்கையிலேயே இருப்பது போலவே, ஞான, வைராக்யங்கள். மஹான்களிடம் பிறக்கும்பொழுதே இருக்கும். அவர்கள்தான் பக்தி, ஞான வைராக்கியங்களை பிறருக்கு சொல்லி கொடுக்க முடியும். அப்படி ஒருவராய் இந்த விட்டல்பந்த் இருந்தார்.

உலக வாழ்வில் சிறிதும் இஷ்டம் இல்லாதவராக மிகவும் வைராக்யசீலராக இருந்தார் இந்த விட்டல்பந்த். அவர் தாய், தந்தையிடம் தீர்த்த யாத்திரை சென்று வருகிறேன் என்று சொல்லி விட்டு கிளம்பினார். பல க்ஷேத்ரங்களுக்கு சென்று விட்டு, அதன்பின் ஆலந்தி எனும் க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தார். தீர்த்தயாத்திரைக்கும் க்ஷேத்ரங்களுக்கும் செல்வதில் பெரிய பலன் இருக்கிறது. க்ஷேத்ரங்களில் உள்ள கோவில்களில் உள்ள ஸ்வாமி சான்னித்யத்துடன் இருக்கிறார். நாம் போய் சும்மா நின்றாலும் போதும். அந்த ஸ்வாமியின் அனுக்ரஹம் கிடைத்து விடும்.

(தொடரும்)



Please subscribe to avoid delay

# பாலகர்களுக்கு ஒரு கதை



## மாதவன் கட்டிய வீடு!

மாதவன் ஒரு பத்து வயது சிறுவன். ஆர்வமும் துடிப்பும் குதூகலமும் நிறைந்த மாதவனை பார்த்தால் பத்து வயது என்று யாராலும் சொல்ல முடியாது. தன்னொத்த சிறுவர்களிடம் விளையாடி மகிழ்பவன். பண்டிகைக்காலம் ஆனதால் பள்ளியில் தொடர் விடுமுறை விட்டிருந்தார்கள். அவன் அச்சமயம் தன் நண்பன் சங்கரனை தன் வீட்டிற்கு விளையாட அழைத்தான். சங்கரனும் சம்மதித்தான். ஆனால் அன்று வீட்டில் பண்டிகையானபடியால் சங்கரன் வர தாமதமானது. மாதவன் வீட்டிலும் பண்டிகை. அது முடிந்த பின், மாதவனும் சங்கரனும் என்ன செய்வது என்று வெளியே உலாவினர். தோட்டத்தில் ஒரு சிறு மணற்குன்று. அருகே சிறு சிறு செடிகள். கொஞ்சம் தள்ளி பெரிதான கருங்கற்கள் காணப்பட்டன.

மாதவன் சொன்னான் "சங்கரா ஒரு வீடு கட்டுவோம். அதன் மேல் கொடிகளை கொண்டு கூரை அமைப்போம்" என்றான். எப்படி என்றான் சங்கரன்.

இதோ பார் மணற்குன்றுதான் அஸ்திவாரம். அங்குள்ள பத்து கருங்கற்களே சுவராக வைத்து கொள்வோம். தென்னங்கீற்று கீழே இருக்கிறது. மேலே மூடினால் ஆயிற்று. அழகுக்கு பூக்கள் உள்ளனவே" என்றான்.

சங்கரனும் அதற்கு ஆமோதித்தான். இருவரும் முதலில் தென்னங்கீற்றை சேகரித்தனர். மணற்குன்று இருக்குமிடத்தை சுத்தம் செய்து சமப்படுத்தினர். அதன்பின் கற்களை எடுக்கலாம் என்று கற்களின் அருகே சென்றனர். சங்கரன் தூக்கி பார்த்தான். பெரிய கல் ஆனபடியால். அவனால் அசைக்க கூட முடியவில்லை. மாதவன் முயன்றான். அவனால் அசைக்கத்தான் முடிந்தது. அதற்கு மேல் முடியவில்லை.

ஒரு முப்பது நிமிடங்கள் முயன்ற இருவரும் வேர்க்க விறுவிறுக்க அந்த முயற்சியை கை விட்டனர். மேலும் ஒருவருக்கொருவர், "அடடா! வேறு ஏதாவது விளையாடி இருக்கலாம். களைப்பாக இருக்கிறது. நீர் அருந்தலாம் வா" என்றபடி கிளம்பினர். முழு பலத்தை உபயோகித்தும் தங்களால்



Please subscribe to avoid delay

நினைத்ததை செய்ய முடியவில்லை என்பதால் இருவரும் விளையாடுவதை நிறுத்த முடிவு செய்தனர். அதை மாதவனின் தந்தை பின்னே வந்து நின்று கவனித்தவாறு இருந்தார்.

ஒன்றும் சொல்லாதிருந்த அவர், அவர்கள் விளையாட்டை நிறுத்தியவுடன் மாதவனை பார்த்து, "என்னடா மாதவா! உன்னால் அந்த கல்லை நகர்த்த முடியவில்லையா?" என்றார். "இல்லை அப்பா. இது மிக பளுவாய் இருக்கிறது" என்றான் மாதவன். உன் பலம் முழுவதும் உபயோகித்தாயா? என்று கேட்டார் தந்தை. "ஆமாம். என்னுடையது மட்டுமல்ல, என் நண்பனாகிய சங்கரனும் நானும் சேர்ந்து கூட முயற்சித்து பார்த்தோம். முடியவில்லை அப்பா" என்றான் மாதவன்.

"நீ உன் பலம் முழுவதும் உபயோகிக்கவில்லை மாதவா" என்றார் தந்தை. "எப்படி அப்பா சொல்கிறீர்கள்?" என்ற மாதவனுக்கு தந்தை பதில் சொல்லவில்லை. அவனது கையை பிடித்து கொண்டார். அந்த கல்லை அவன் கையுடன் சேர்ந்து பிடித்தார். அவர் தூக்கவே கல் வந்தது. அவர் தூக்கி வைத்தார். ஆனால் மாதவனின் கையை விடவில்லை. "பார்த்தாயா உன் பலம் உனக்கு தெரியவில்லை. ஏன் நீ என்னை கூப்பிடவில்லை. உன் அப்பா ஆன நான் நீ கூப்பிட்டால் வர மாட்டேனா? என்னை கூப்பிட்டால் எடுத்து தர மாட்டேன் என்று சொல்வேனா என்ன?" என்றார். உடனே சங்கரனும் மாதவனும் மிகுந்த சந்தோஷப்பட்டு புன்னகைத்தனர். இனிமேல் அவர்கள் விளையாட்டில் எப்பொழுதும் வெற்றிதான் என்பதையும் உணர்ந்தார்கள்.

கூடவே மாதவனின் தந்தை, "மாதவா! இப்படித்தான் நாம் ஒரு செயலில் முயற்சி செய்து தோல்வியுற்றால், இறைவனை, குருவை துணைக்கு அழைத்தால், அவர் அருளினால் அந்த காரியம் வெற்றிகரமாக கைகூடும். குருநாதனின் குழந்தைகளான நமக்கு எப்பொழுதும் உதவி செய்ய, இறைவனும் குருவும் சித்தமாய் இருக்கின்றனர். அவரிடம் பிரார்த்தனை என்பதை வைத்தால், அவர் நமது நியாயமான கோரிக்கைகளை முழுவதும் நிறைவேற்றி தருகிறார். அவரை துணைக்கு கூப்பிட்டால் வேலை வெற்றிகரமாகும். குருவாலும் கடவுளாலும் ஆகாதது உண்டோ?" என்றார். மாதவனும் சங்கரனும் அதை நன்கு உணர்ந்து மகிழ்ந்தனர்.



Please subscribe to avoid delay

**ஜனவரி 21, 2015 - கீர்த்தனாவளி மண்டபம் திறப்பு விழா -** காஞ்சிபுரம் ஸ்ரீவரதராஜ பெருமாள் கோவில் சன்னதி தெருவில் 16கால் மண்டபத்திற்கு எதிரில், புதியதாக நிர்மாணம் செய்யப்பட்டுள்ள ஸ்ரீகீர்த்தனாவளி மண்டபத்திற்கு, பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்கள் பொன்னடி சாற்றி, தன்னுடைய திருக்கரகமலங்களால் திறந்து வைத்து, அனுக்ரஹ பாஷணம் வழங்கி அருளினார்கள்.

**ஜனவரி 1, 2015 - மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை -** 1886ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி ராமகிருஷ்ண பரமஹம்ஸர் காசிப்பூர் தோட்டத்தில் புற்று நோயால் பாதிக்கப்பட்டு, வேதனையுடன் படுத்திருந்த அந்த சமயத்தில் தன்னை மறந்து, ஒரு உன்னத ஸ்திதியில் தன் பக்தர்கள் கேட்ட வரங்களையெல்லாம் வாரி வழங்கினார். ராமகிருஷ்ண பக்தர்கள் இன்றளவில் அந்த தினத்தை கற்பகத்தரு நாள் என்று கொண்டாடி வருகின்றார்கள்.

வள்ளிமலை ஸ்வாமிகள் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 1ஆம் தேதி அன்று முருகனுக்கு படிவிழா கொண்டாடுவார்கள். அதுபோல் நம் ஸ்வாமிகளும், இந்த தினத்தை கூட்டு ப்ரார்த்தனை தினமாக கொண்டாடினால் நன்றாக இருக்குமென்று முடிவு செய்து 1.1.2007 முதல் சென்னை, காமராஜர் அரங்கம் 2007இலும், 2008இல் தூத்துக்குடி வி.ஓ.சி. கல்லூரி, 2009இல் திருக்கோஷ்டியூர், 2010இல் சென்னை குரோம்பேட்டை விவேகானந்தா வித்யாலயா, 2011இல் தஞ்சாவூர் தமிழரசி திருமண மண்டபம், கோவை 2012 சபர்பன் பள்ளி அரங்கம், 2013இல் வேலூர் வள்ளல் கிருஷ்ணஸ்வாமி மெட்ரிகுலேஷன் பள்ளி, 2014இல் தேனி ரேணுகா வித்யாலயம் பள்ளி என்று, ஒவ்வொரு வருடமும் ஜனவரி 1ஆம் தேதியன்று கூட்டு ப்ரார்த்தனை நடத்தி வருகின்றார்கள்.

1.1.2015 அன்று அம்பத்தூர் ஜி.கே.ஷெட்டி விவேகானந்தா வித்யாலயா ஜூனியர் காலேஜ் மைதானத்தில், நம் ஸ்வாமிகளின் கூட்டு ப்ரார்த்தனை நடந்தது. வெளியூர், வெளி மாநிலங்கள், அயல் நாடுகளிலிருந்து கூட பக்தர்கள் வந்து கலந்து கொண்டனர். ஏறத்தாழ 7000பக்தர்கள் கூட்டுப்ப்ரார்த்தனையில் பங்கேற்றனர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், இங்கு கூட்டு ப்ரார்த்தனை நடத்தலாம் என்று முடிவு செய்தவுடனேயே, விவேகானந்தா எஜுகேஷன் சொஸைட்டி



Please subscribe to avoid delay

செயலாளர் திரு.சக்கரவர்த்தி அவர்கள், தாமே முன் வந்து எல்லா ஏற்பாடுகளும் செய்து கொடுத்து, கூட்டுப்ப்ரார்த்தனை நன்றாக நடக்க உதவினார். பள்ளி நிர்வாகிகள் மற்றும் அலுவலர்களும், தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் நல்கி இந்த ப்ரார்த்தனை கூட்டம் சிறப்பாக அமைய உதவினார்கள். மாலை 5மணியிலிருந்து, திரு.சங்கர் கீபோர்டில் அருமையான இசை வழங்கினார். 6மணிக்கு திரு.சித்தார்த், ஸ்ரீமஹாபெரியவர்கள் இயற்றிய "மைத்ரீம்பஜத" பாடலை பிரார்த்தனை பாடலாக பாடினார். இவர், ஆஸ்திரேலியாவில் பாரத பிரதமரை வரவேற்று இதே பாடலை பாடிய குழுவினரில் ஒருவர் ஆவார். அதன்பின் திரு.வல்லபதாஸ், மிக அழகாக G.O.D இந்தியா அமைப்பின் பல்வேறு சமூக பணிகளையும், தூய்மை செய்யும் பணியையும் எடுத்து பேசினார். மேலும், தமிழகம் முழுவதும், 30 மாவட்டங்களில், 360க்கும் மேற்பட்ட பள்ளிகளில், ஒரு லக்ஷத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர்களுக்காக வருடம் தோறும் நடத்தப்பெறும் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை கூட்டங்களை பற்றியும், விரிவாக எடுத்து சொன்னார். இதை தொடர்ந்து, உலகின் பல பாகங்களிலிருந்து வந்திருந்த நாமத்வார் பொறுப்பாளர்கள் தங்கள் பகுதிகளில் நடைபெற்று வரும் பணிகளையும், நாமானுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்கள். இதற்கு பிறகு ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் வழங்கிய கூட்டு ப்ரார்த்தனை அருளுரையை வந்திருந்த சுமார் ஏழாயிரம் அன்பர்களும் அமைதியாக அமர்ந்து கேட்டு மகிழ்ந்து, அவருடனே மஹாமந்திர கீர்த்தனமும் செய்து மகிழ்ந்தனர். திரு.கோவூர் ஷண்முகத்தின் நன்றியுரையுடன், கூட்டு ப்ரார்த்தனை நிறைவடைந்தது.

**ஜனவரி 10 - 18 - சைதன்ய சரிதம்** - சென்னை நாரத கான சபாவில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் வங்காளத்தை சேர்ந்த ஸ்ரீக்ருஷ்ண சைதன்ய மஹாப்ரபுவின் திவ்ய சரிதத்தை, மிக உருக்கமாக எடுத்து அருளினார்கள். தினமும் நிரம்பி வழிந்த அரங்கத்தில், பெருந்திரளான அன்பர்கள் வந்து, திருவருளும் குருவருளும் பெற்று ஆனந்தித்தனர்.

**ஜனவரி 24** - மஹாரண்யம் ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாளின் ப்ரதிஷ்டா தினம், மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில், மிக சிறப்பாக நடைபெற்றது. காலை திருமஞ்சனமும், மாலை ஸ்ரீபத்மாவதி கல்யாணமும் இடம் பெற்றிருந்தது.


Please subscribe to avoid delay

**ஜனவரி 3** - சென்னை தேனாம்பேட்டை காமராஜர் அரங்கத்தில் இரு பகுதிகளாக நடைபெற்ற, பொதுத்தேர்வை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனையில், பாக்யநாதன்ஜி மற்றும் ராமானுஜம்ஜி சுமார் 6000மாணவர்களை ஊக்குவித்து பேசினார்கள்.

**ஜனவரி 3 - 15** சிவகாசி, சாத்தூர், தாயில்பட்டி, விருதுநகர், மதுரை, தேனி, பட்டிவீரன்பட்டி, வத்தலகுண்டு, நிலக்கோட்டை, மற்றும் மங்களூரிலுமாக (தமிழகம்) சேர்த்து சுமார் 36 பள்ளிகளில் 13000 மாணவர்கள் முன்பு, முரளிஜி மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை நிகழ்த்தி, ஊக்குவித்து பேசினார். டிசம்பர் மாதம் அரக்கோணம் தர்மராஜா கோவிலில் பாகவத உபன்யாசமும், சோளிங்கரில் ஆழ்வார்கள் வைபவம் என்ற தலைப்பில் சத்சங்கமும் நிகழ்த்தினார்.

**டிசம்பர்** -"மனித நேயமும் தெய்வீகமும் இணைபிரியாதவை" எனும் ஸ்ரீஸ்வாமிஜியின் அருள்மொழிகளுக்கேற்ப, மலேசிய நாட்டின் வடகிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோரின் நிவாரண உதவிகளுக்காக, போர்வைகள் மற்றும் குடிநீரை மலேசிய நாமத்வார் அன்பர்கள் அனுப்பி இருந்தனர்.

---

## சனாதனப்புதிர் பகுதி 70 - விடைகள் -ஆத்ரேயன்

1.திருதாசி என்ற அழகிய அப்ஸரஸை.

2.பெண் கிளியாக.

3.அவரது வீர்யம் கீழே விழுந்தது.

4.சுகர் என்ற பிள்ளை.

5.பிருஹஸ்பதியை.

6.மிதிலை அரசரான ஜனகரை.

7.ஸுமந்து, வைசம்பாயனர், ஜைமினி, பலர்.

8.பெரும்பாலும் வசன நடையில் காணப்படுகிறது.

9.சிவபுராணம் (சதருத்ரீய ஸமிதாத்யாயம்; சரபோநிஷத்; உத்திரகாமிகா - படலம் - 54).

10.27 முகங்கள்; 50 கைகள் - வலது புறத்தில் 25, இடது புறத்தில் 25கைகள்; 50கைகளிலும் ஆயுதங்கள் / மற்றும் இதர வஸ்துக்கள் - ஸ்காந்த புராணம் - சங்கர ஸமிதை - தேவதா நாமகுசும மஞ்சரி என்ற அச்சிடப்படாத நூலில் இவரது படம் காணப்படுகிறது. இது மைசூர் அரண்மனையில் உள்ளது.



Please subscribe to avoid delay

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி



## பக்தராஜ் ஸ்ரீமானஸிம்ஹஜி-2

டாகுர் குசல்ஸிம்ஹஜியிடம், மானஸிம்ஹஜி தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு, தனது மனோநிலையை கூறி, தகுந்த ஆலோசனையளிக்குமாறு ப்ரார்த்தித்தார் .

அவர், "உன்னுடைய சாந்தியின்மைக்குக் காரணம், நீ ஞான மார்க்கத்தை தேர்ந்தெடுத்திருப்பதே. அது உனக்கு ஏற்றதல்ல; ஏனெனில், உன் மனம் ஸ்வயமாக பக்தி மார்க்கத்தில் ப்ரவ்ருத்தியுடையது. பக்தி மார்க்கமே எல்லாவற்றை காட்டிலும் சிறந்ததும் கூட. பக்தியை அவலம்பித்தால் நீ சாந்தியடைவாய்" என்று கூறினார்.

"பக்தியை அவலம்பிப்பதென்றால் என்ன செய்ய வேண்டும்?" என்று மானஸிம்ஹ் உத்ஸாஹமாய் கேட்டார்.

"ப்ருந்தாவனம் தான் பக்தியின் கேந்த்ரம். நீ அங்கு செல்ல வேண்டும்" என்று பதிலுரைத்தார்.

"அங்கே சென்று யாரை சரணடைய வேண்டும்?"

"அங்கே தாவுஜியின் தோட்டத்தில், பண்டித் ராமக்ருஷ்ணதாஸ் பாபா வஸிக்கிறார். இப்பொழுது இருக்கும் பக்தர்களில், அவர் ஸ்ரேஷ்டராக கருதப்படுகிறார். பக்தியின் ஸ்வரூபமாகவே அவர் இருக்கிறாராம். அங்கு சென்றால், நீ விரும்புவதை அடைவாய். ஆனால், அவர் க்ருபைக்கு பாத்திரம் ஆவது மிகவும் கடினம்" என்று கூறினார் குசல்ஸிம்ஹ் டாகுர்.

வழி தெரிந்தவுடன் ஒரு க்ஷணம் கூட வீணாக்காமல், அவர் ப்ருந்தாவனத்தை நோக்கி செல்லலானார். அங்கு தாவுஜியின் தோட்டத்திற்கருகே, ஷாஜஹான்புரி தோட்டத்தில் ஒரு ஸாதுவுடன் தங்கினார். தைன்யத்தினால், அவர் நேரடியாக பண்டித ராமக்ருஷ்ணதாஸ் பாபாவை சந்திக்க தயங்கினார்.

பண்டித பாபா தினமும் காலையில் சௌசத்திற்கு செல்லும் வழியில், மானஸிம்ஹ் நிற்பார். பண்டித பாபாவை கண்டதும், கைகளை கூப்பி நமஸ்காரம் செய்வார். இப்படியே



Please subscribe to avoid delay

மூன்று மாதங்கள் கழிந்தன. எங்கிருந்தாவது ராகி மாவு வாங்கி அதை ரொட்டியாக செய்து, மென்று விழுங்குவார். இதுவே அவருக்கு ஆகாரம். மற்றபடி நாள் முழுவதும், பண்டித பாபாவின் த்யானத்திலேயே, அவரை ப்ரார்த்தனை செய்தபடியே இருப்பார்.

பண்டித பாபா சௌசத்திற்கு போகும்போதெல்லாம், தலையை குனிந்தபடியே செல்வார். இவர் நமஸ்காரம் செய்யும்பொழுது, தலையை மட்டும் அசைப்பார். இவரை த்யானமாக ஒருமுறை கூட கூர்ந்து அவர் பார்த்ததில்லை. தினமும் இப்படி ஒருவர் நின்று நமஸ்கரிப்பதை மூன்று மாதங்களும் கவனித்த பின், "இவர் யார்" என்று ஆவலுடன் தலையை தூக்கி பார்த்தார் பாபா. முகத்தை பார்த்ததுமே இவர் சாதாரண வீட்டு பிள்ளை இல்லை என்று தெரிந்து கொண்டார். "நீ எந்த இடத்தைச் சேர்ந்தவன்?" என்று மானஸிம்ஹை கேட்டார். மானஸிம்ஹும் தன்னை அறிமுகம் செய்து கொண்டார்.

பாபா, "இங்கே ஏன் நின்று கொண்டேயிருக்கிறாய்?"

"தங்களை தரிசிக்கவே!"

பாபா ஒன்றும் கூறாமல் சென்றுவிட்டார். மேலும் ஒரு மாதம் இப்படியே கழிந்தது. பின் ஒரு நாள் பாபா, எங்கே தங்கியிருக்கிறாய்? என்று கேட்டார்.

"ஷாஜஹான்புரி தோட்டத்தில்" என்று கைகளை கூப்பி பதிலுரைத்தார் மானஸிம்ஹ். பாபா, "நான்கு மணியளவில் நம் இடத்தில் கதை நடக்கும். அங்கு வா" என்றார்.

மானஸிம்ஹ் கதைக்கு செல்ல ஆரம்பித்தார். பாபாவின் கடாக்ஷம் தினமும் அவர் மீது பட ஆரம்பித்தது. அவருடைய உத்ஸாஹத்தையும் ப்ரேமையையும் கண்ட பாபா, "நீ இங்கேயே வந்துவிடு. ஏதாவது ஒரு கொடியின் கீழ் இருந்து கொள்" என்று கூறினார்.

மானஸிம்ஹின் துயர் எனும் இருள் நிறைந்த ஹ்ருதயத்தில், நம்பிக்கை எனும் கிரணங்கள் உதித்தது போல் இருந்தது. தன் மீது பாபா பொழியும் அபரிமிதமான கருணையை எண்ணி, அவர் ஆனந்தித்தார். அன்று முதல்



Please subscribe to avoid delay

தாவுஜியின் தோட்டத்திலேயே, ஒரு கொடியின் கீழ் அவர் வஸிக்கலானார்.

அந்த தோட்டத்தில், குரங்குகளின் தொல்லை அதிகம். மானஸிம்ஹ் ரொட்டி செய்து கொள்ளும்பொழுது, இந்த குரங்குகள் தாக்குதல் நடத்த ஸித்தமாகிவிடும். அப்பொழுது சில ஸமயங்களில், பாபாவே ஒரு கழியை கையில் வைத்துக் கொண்டு அவரிடம், "நான் பார்த்துக் கொள்கிறேன். நீ ரொட்டி செய்து கொள்" என்பார்.

மானஸிம்ஹ் வீட்டிலிருந்து திடீரென்று காணாமல் போனதை பார்த்து, அவர் வீட்டில் உள்ளவர்கள் அனைவரும், கவலையில் ஆழ்ந்தனர். அவரை தேடலானார்கள். அப்படி அவர்கள் தேடி தேடி குசல்ஸிம்ஹ்ஜியை அடைந்தார்கள். அவர் கூறியதன் பேரில், ப்ருந்தாவன் சென்று, மானஸிம்ஹை பார்த்தும் விட்டார்கள்.

அவருக்கு பல விதமாக............

(தொடரும்)


**Dr. Shriraam Mahadevan**

**MD (Int Med), DM (Endocrinology)**

**Consultant in Endocrinology and Diabetes**

**Regn. No 62256**

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

**New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,**

**R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.**

**(Next to Krishnamachari Yogamandiram)**

**Tel: 2495 0090Mob: 94458 80090**

**E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com**

**www.chennaiendocrine.com**





Please subscribe to avoid delay

# *மாலே மணிவண்ணா – 136*




–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

ஸ்ரீஇருந்த வளம் உடையார் கோயிலில் எழுந்தருளி உள்ள பெருமானை தோத்திரம் செய்யும் பாடல் "வான் ஆர் எழிலி மழைவளம் நந்தத் .. திருந்தடி தலையுறப்பரவுதும் தொழுது" .. பெருமழைநீர் தேனடைகள் பொருந்திய மலையில் இருந்து இறங்கி நான்மாடக்கூடல் - மதுரையில் வைகையாக வந்து, சிறந்த மருந்தாக இனிய நீரால் விளங்கும் வைகை நதித்துறையில் கோயில் கொண்டு இருந்தையூரில் எழுந்தருளி இருக்கும் பெருமானே! உம் அழகிய திருவடிகளை எங்கள் தலை தொடும்படி வணங்கி தோத்திரம் செய்கின்றோம்", இது நாட்டு சிறப்பும் நகர சிறப்பும் கோயிற்சிறப்பும். மதுரை நகரில் உள்ளவர்களுக்கு உண்ணும் உணவாகவும் மருந்தாகவும் உள்ள வைகையாற்றுத்துறையிலே உள்ள இருந்தையூர்; ஆற்று நீர் உணவாகவும் மருந்தாகவும் பயன்படுவது; உண்ணும் நீர்; உணவுப்பொருள்களை விளைவிக்கவும், நோய் போக்கி கொள்ள மருந்தாகவும் பயன்படுவது ஆற்று நீர்; ஆற்று நீரை தூய்மை கெடாது பயன்படுத்த வேண்டும் என்பது உட்பொதிந்த அறிவுரை. மலை மேல் பொழிந்தாலும் மழை மலைக்கு பயன்படுவது இல்லை. ஆறாக வந்து நகர மக்களுக்கு பயன் தரும் ஆதலின் நகரம் நீரை வரவேற்பது; நான்கு மாடம் கூடலின், நான்மாடக்கூடல்; திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர் என்ற நான்கு நகர பகுதிகளின் சேர்க்கை மதுரை; கன்னி, காளி, கரியமால், ஆலவாய் ஈசன் இந்நால்வரும் கோயில் கொண்டு மதுரையை காக்கின்றனர்.

வருணன் விட்ட கடலை ஆலவாய் பெருமான் வற்ற செய்ததால் சீறிய வருணன், தன் ஆணைக்கடங்கிய ஏழு மேகங்களையும் பெருமழை பொழிய செய்தான். அது கண்டு வருந்திய பாண்டியன் ஆலவாய் பெருமானை துதிக்க பெருமான் தன் சடையில் உள்ள நான்கு மேகங்களையும் நோக்கி மதுரை மாநகர் எல்லை வரையும் சுற்றி மாடமாக இருந்து மழையை நகருக்குள் பொழியாதபடி விலக்குங்கள்




Please subscribe to avoid delay

என்று கட்டளையிட அவ்வாறு சிவபெருமான் திருவருள்வழி, நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகி கூடி நின்று காத்தலின் நான்மாடக்கூடல் என்று மதுரைக்கு பெயராயிற்று என்பது திருவிளையாடற்புராணம் கூறும் சரிதை ஆகும்.

இத்தலம் தற்போது கூடலழகர் கோயில் என வழங்குகிறது. ஆயினும் சங்கநூல்கள் இருந்தையூர் என்றே கூறுகின்றன. சங்கப்புலவர் பெயர்கள் இப்பெயரோடு ஒட்டியுள்ளனவற்றை சங்க இலக்கியங்களில் காணலாம். இருந்தையூர்க்கருங்கோழி மோசியார், இருந்தையூர் கொற்றம்புலவன் என்ற பெயர்களால், சங்ககாலத்தே, மதுரை மாநகருக்குள்ளே இருந்தையூர் பிரசித்தி பெற்றிருந்ததை அறியலாம்.

அப்பெருமானது திருவடியை திருந்து அடி என்றார். இலக்கணத்தாற் சிறந்த அடி என்றாகும். பின்னிடாத அடி என்றும் பொருள் கொள்ளலாம். அந்த செல்வனது திருவடியை தலையில் படும்படி தொழுது தோத்திரம் செய்வோம் என்று தொடங்குகிறார். (தொடரும்)



75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com www.buddiesinfotech.com



Please subscribe to avoid delay

# ஸ்ரீ மஹாபெரியவாள் கருணை

- ப்ரும்மஸ்ரீ பம்மல் ஏகாம்பரம்

சென்னை மேற்கு மாம்பலத்தில் அமைந்துள்ள அயோத்யா அஸ்வமேத மஹாமண்டபம், சென்னைவாசிகளுக்கு ஒரு வரப்ரசாதம். இந்த அயோத்யா மஹாமண்டபத்திற்கு, வராத மஹான்களே கிடையாது.

இந்த மஹாமண்டபத்தில், ஆரம்ப நாள் முதல், இன்று வரை தொடர்ந்து, வேதபாராயணங்கள், வைதீக ஹோமங்கள், பூஜைகள், இதிஹாஸ புராண பாராயணங்கள், ப்ரவசனங்கள் நாம சங்கீர்த்தனம் என்று நடந்து கொண்டே இருக்கிறது.

இந்த அயோத்யா மஹாமண்டபத்திற்கும், மேற்கு மாம்பலத்தில் இயங்கி வரும் ஹெல்த் சென்டருக்கும், பூமிபூஜை செய்தது மஹாபெரியவாள்தான்.

1965ஆம் வருடம், சென்னையில் பல இடங்களுக்கு விஜயம் செய்து, ஸ்ரீமஹாபெரியவாள் அனுக்ரஹம் செய்து வந்தார்கள். சில நாட்கள், சென்னை அயோத்யா மண்டபத்தில் தங்கி இருந்தார்கள். அன்று அல்ப த்வாதசி. அதாவது த்வாதசி திதி, சிறிது நேரம்தான் காலையில் இருக்கும். அதற்குள், பூஜை பிக்ஷை எல்லாம் முடித்து விட வேண்டும்.

பிறகு, பக்தர்களின் அழைப்பை ஏற்று, பல இடங்களுக்கும் சென்றார்கள். என்னையும், உடன் அழைத்து சென்றார்கள். அன்று மாலை 4மணிக்கு, மீண்டும் அயோத்யா மண்டபம் வந்து சேர்ந்தோம்.

அன்று, ப்ரதோஷமாகவும் அமைந்தது. மடத்தில் உள்ள ஒருவர் ஸ்நானம் செய்து விட்டு, பூஜைக்கு எல்லாவற்றையும் தயாராக எடுத்து வைத்திருந்தார். நானும், ஸ்நானம் செய்து விட்டு, ஸ்ரீபெரியவாளின் ஸ்நானத்திற்கு எடுத்து வைத்தேன். ஸ்ரீபெரியவாளும் ஸ்நானம் செய்து விட்டு, பூஜைக்கு வந்து விட்டார்கள்.


Please subscribe to avoid delay

ஸந்த்யா காலத்திற்குள், ஸ்வாமி அபிஷேகம் செய்து விட்டு அலங்காரம் செய்து, அழகாக ரதத்தில் எழுந்தருளச் செய்தார்கள். மாலை செய்ய வேண்டிய அனுஷ்டானத்தை முடித்து விட்டு, அர்ச்சனை, நிவேதனம், தீபாராதனை எல்லாம் செய்தார்கள். வந்திருந்த பக்தர்களுக்கு ப்ரசாதம் வழங்கினார்கள்.

பிறகு, பூஜைக்கு நிவேதனம் செய்யும் அறையில் வந்து அமர்ந்தார்கள். சமையல் செய்த இடமாக இருந்ததால், சற்று உஷ்ணமாக இருந்தது. அங்கேயே ஆசனம் போட சொல்லி, அமர்ந்து பிக்ஷை எடுத்து கொண்டார்கள்.

என்னை பார்த்து, காலையில் அகத்தி கீரை நிறைய வந்திருந்தது. அந்த கீரையுடன் ,அகத்தி பூவும் இருந்தது. சிவப்பு ராமமூர்த்தியிடம் சொல்லி, அந்த அகத்தி பூவில் பஜ்ஜி போட சொல்லு என்றார்கள். நானும், அவரிடம் சொல்லி விட்டு வந்தேன்.

அதற்குள், பெரியவாளுக்கு அசதியாக இருந்ததால், சாப்பிட அமர்ந்திருந்த இடத்திற்கு, அருகிலேயே படுத்து விட்டார்கள். நானும் பக்கத்தில் போய் அமர்ந்தேன். "அகத்தி பூவை போல இன்னும் எத்தனை பூவை சாப்பிடலாம்?" என்று கேட்டார்கள்.

நான் சற்று யோசித்து, "வாழைப்பூ, ரோஜாப்பூ" என்று சொல்லி நிறுத்தினேன். "அவ்வளவுதானா! நான் சொல்லிக்கொண்டே வருகிறேன். எண்ணிக்கொண்டே வா" என்றார்கள். அகத்திப்பூ, வாழைப்பூ, ரோஜாப்பூ, வேப்பம்பூ, க்ராம்பு, குங்குமப்பூ, செம்பருத்தம்பூ, கொழக்கட்டை மந்தாரம்பூ, புளியம்பூ, அம்மா பச்சரிசிப்பூ, வசம்பு, சோம்பு, கம்பு, ஆவாரம்பூ இப்படியாக மொத்தம் 14பூக்களின் பெயர்களை சொன்னார்கள்.

அதற்குள் ராமமூர்த்தியும் அகத்திப்பூ பஜ்ஜி செய்து எடுத்து வர அதில் சிறிது எடுத்து வாயில் போட்டுக்கொண்டு அந்த இடத்திலேயே அன்றிரவு தூங்கிவிட்டார்.

(நிகழ்வுகள் தொடரும்)



Please subscribe to avoid delay

“மதுரமுரளி” ஆண்டு சந்தா ரூ 120. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி: **Guruji Sri Muralidhara Swamigal Mission, No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.**
- ஒரு வருட சந்தா மட்டுமே பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஏகாதசி | பிப் 15, மார்ச் 1, 16 |
| பிப் 17 | மஹாசிவராத்திரி - கன்யாகுமரி ஸ்ரீஜய ஹனுமான் பிரதிஷ்டா தினம் |
| பிப்ரவரி 11 | திருவண்ணாமலை ஸ்ரீயோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம் புது வேதபாடசாலை கட்டிட திறப்பு விழா |
| மார்ச் 1 | சென்னை நாரத கான சபா - ஸ்டார் விஜய் டி.வி. பக்தி திருவிழா துவக்கம் - மாலை 5 மணி |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**



Please subscribe to avoid delay